**மினுவங்கொட நகர சபை - 2022**

-----------------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மினுவங்கொட நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) பிரிவு 181 (1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, மினுவங்கொட நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சல் உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை காசுப் பாய்ச்சல் உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி இந்த அறிக்கையில் 1.6 பந்தியில் 1.6.1 அவதானிப்பு தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்கீட்டு கொள்கை இலக்கம் 3.2 இன் கீழ் கணினி மென்பொருள், சொத்துக்கள் என நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டது என காட்டப்பட்டிருந்த போதிலும் வருமானப் பிரிவில் மற்றும் நூலகத்தில் பயன்படுத்தப்படும் கணினி மென்பொருள் இரண்டின் பெறுமதியை கணித்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | இந்த பெறுமதி 2023.12.31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்ள வேண்டும். |

#### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களின் படி 06 கணக்கு விடயங்களின் கூட்டுத்தொகை மற்றும் துணைப் பதிவேட்டின் படி மீதிகளின் கூட்டுத்தொகை இடையே ரூபா 2,918,861 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | 2023.12.31 திகதியில் முடிவடையும் ஆண்டிற்கான கணக்குகளில் சரிசெய்து சமர்ப்பிக்கப்படும் என. | வித்தியாசங்களுக்கான காரணங்களை கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை<br>ரூபா. | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| நிலுவை சந்தை வாடகை | 314,925 | அட்டவணை | 2023.12.31 திகதியில் முடிவடையும் ஆண்டிற்கான கணக்குகளில் சரிசெய்து சமர்ப்பிக்கப்படும் என. | அட்டவணைகள் சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 இணங்காமை

### வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 58,160 இற்கான முத்திரை வரி 2023 ஏப்ரல் 03 திகதி வரை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தியிருக்கவில்லை. | முத்திரை வரி மீதியை அனுப்புவதற்க நடவடிக்கை எடுக்கப்படும் என. | செலுத்த வேண்டிய முத்திரை வரி உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்த வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 26,655,396 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 22,083,743 தொகையாக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 72,885,587 தொகை முதலீடு செய்யப்படாமல் நடைமுறைக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | பஸ் நிலையத்திற்கு அண்மையிலுள்ள புதிய பொது வர்த்தக தொடர் கட்டிடத்திற்கு சுயமாக இயங்கும் கதவுகள் பொருத்துவதற்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு தற்போது அங்கீகாரம் கிடைத்திருப்பதுடன் அதற்காக விரைவாக கொடுப்பனவு செய்வதற்கு நேரிடுவதனால் நடைமுறைக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | மிகைப் பணம் நடைமுறைக் கணக்கில் தடுத்து வைக்காமல் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

2.3 வருமான நிருவாகம்

2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| வீதவரி மற்றும் வரி | 20,515 | 20,474 | 14,319 | 14,577 | 20,250 | 21,433 | 14,193 | 15,673 |
| வாடகை | 40,675 | 29,640 | 27,326 | 2,370 | 14,497 | 16,340 | 14,984 | 1,189 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 846 | 723 | 686 | 37 | 400 | 298 | 243 | 55 |
| ஏனைய வருமானங்கள் | 24,925 | 31,957 | 31,957 | - | 47,090 | 33,693 | 33,693 | - |
| | 86,961 | 82,794 | 74,288 | 16,984 | 82,237 | 71,764 | 63,113 | 16,917 |

2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **வீதவரி வரி** | | |
| மீளாய்வாண்டிற்குரிய வீதவரி மற்றும் வரியும் சிட்டையிடப்பட்ட வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 950,000 தொகையினால் குறைந்திருந்தது. | பிரிவுகளாக வேறாக்கப்பட்டு நிலுவை வருமானம் அறவீடு செய்யும் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருமானம் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **வாடகை** | | |
| நிலுவை வருமானம் அறவீடு செய்யும் அட்டவணையின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை கடை வாடகை ரூபா 1,571,919 தொகை ஆகும். | 2023.04.30 திகதியளவில் வர்த்தக நிலைய நிலுவையில் 65 சதவீதம் அறவீடு செய்யப்பட்டுள்ளது என | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தனியார் நிறுவனம் ஒன்றிற்கு 2021 ஆண்டில் செலுத்தியிருந்த ரூபா 1,004,400 இற்கான முற்பணத் தொகை | மின் உயர்த்தி வழங்கி பொருத்துவதற்காக செலுத்தியிருந்த முற்பணத் | 2021 ஜூலை மாதம் செலுத்தியிருந்த முற்பணத் தொகை தீர்ப்பதற்கு |

| | | |
|---|---|---|
| 2023 மார்ச் 31 கணக்காய்வு திகதி அளவிலும் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொகை, இறுதிக் கொடுப்பனவு மேற்கொள்ளும் போது குறைக்கும் வரை முற்பணம் என பதிவு செய்யப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நகர சபையினால் 1979 ஆண்டு முதல் பொது விளையாட்டுத் திடல் என அபிவிருத்தி செய்து பராமரிக்கப்பட்டு வந்திருந்த 08 ஏக்கர் தரைப் பகுதியுடனான ஜாபாலவத்த விளையாட்டுத் திடல், காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவினால் காணி உரித்தாக்கல் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி அரச மயமாக்கும் வரை அபிவிருத்தி அலுவல்களுக்காக சிக்கலற்ற அனுபவித்தல் மினுவங்கொட ஜனாதிபதி கல்லூரிக்கு சபையின் எதிர்ப்பை கவனத்தில் எடுக்காமல் உரித்தாக்கப்பட்டிருந்தது. | விளையாட்டுத் திடலின் உரிமை மினுவங்கொட நகர சபைக்கு வழங்கப்படும் என கௌரவ மே.மா. ஆளுனரினால் வாய்மொழி மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. | காணியின் சட்டரீதியான உரிமையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புதிய நூலகக் கட்டிடத்திற்காக ரூபா 5,860,938 இற்கான உபகரண கொள்வனவு தொடர்பாக அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் இலக்கம் 7.9.10 மற்றும் 7.11.1 பிரகாரம் நகர சபையினால் தயாரிக்கப்பட்ட விவரக் குறிப்பு மற்றும் நிறுவனத்தினால் அனுப்பப்பட்டிருந்த விவரக் குறிப்புகளுக்காக இணக்க அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | ஐய வினா ஏற்றுக் கொள்ளப்படுகின்றது என. | 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 சுற்றாடல் சிக்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 மே 11 திகதி முதல் தகன கூடத்தின் 2 பேர்னர்கள் செயற்படாமல் ஒரு வருடத்திற்கு மேலான காலம் முதல் திருத்த வேலை மேற்கொள்ளப்படாமல் சவங்கள் சுடும் அலுவல்கள் மேற்கொள்ளப்படுவதினால் விஷப் புகை மீண்டும் சுடப்படாமல் சுற்றாடலுக்கு விடுவிக்கப்படுகின்றமையால் சுற்றாடல் மாசடைதல் தவிர்க்க முடியாதுள்ளது. | இந்த திருத்த வேலை அலுவல்கள் தாமதம் அடைந்துள்ளது. எவ்வாறாயினும் பிரதேசத்தின் கொரோனா சடலங்கள் தகனம் செய்வதற்கு நகர சபைக்கு நேரிட்டிருந்தது. | சுற்றாடல் மாசடைதலை தவிர்ப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |